**திம்புலாகல பிரதேச சபை**

**பொலன்னறுவை மாவட்டம்**

------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

-----------------------------

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 07 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 09 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜூன் 28 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---------------------------------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து திம்புலாகல பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

-----------------------------------------

களஞ்சியப் பண்டங்கள் தொடர்பாக களஞ்சிய முற்பணக் கணக்கு முறை கடைபிடித்திருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 1,519,130 தொகைக்கான் சொத்து 14 அலகுகளின் பெறுமதியினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) ரூபா 651,205 இற்கான நிலுவை வர்த்தக அனுமதிப்பத்திர வருமானம் ஒன்று நிதிக்கூற்றுக்களில் இருந்து வைிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 256,310 இற்கான கேள்விப் பிணை மீதியொன்று நிதிக்கூற்றுக்களில் இருந்து கைவிடப்பட்டிருந்தது.

(ஈ) வட மத்திய மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 64,830 தொகை கணக்குகளில் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2016 ஏப்ரல் 06 திகதி மாவட்ட செயலகத்தினால் பிரதேச சபைக்கு சாட்டப்பட்டிருந்த திம்புலாகல தகனசாலையின் பெறுமதியாகிய ரூபா 5,142,857 தொகை நிதிக்கூற்றுக்களில் இருந்து கைவிடப்பட்டிருந்தது.

(ஊ) சமய வழிபாட்டுத் தளங்கள் மற்றும் அதன் அண்மித்த பகுதிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 3,900,000 இற்கான தொகையினை மூலதனச் செலவுகளின் கீழ் காட்டப்பட வேண்டுமெனினும் அவை மீண்டுவரும் செலவுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டு மற்றும் கடந்த 03 வருடங்கள் தொடர்பாக செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணத்திற்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் 57 மயானங்களுக்கான பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஐ) நிலையான சொத்துக்களின் பெறுமதி மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவுத்தொகை கணக்குகளிடையே ரூபா 41,445,554 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 06 கணக்கு விடயங்கள் தொடர்பான முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இறுதி மீதி மற்றும் மீளாய்வாண்டிற்கான

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆரம்ப மீதிகளிடையே ரூபா 7,895,238 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவேடுகளின் படி மற்றும் நிதிக்கூற்றுக்களின் படி ரூபா 10,293,064 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டது.

**1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

(அ) 3 வருடங்கள் முதல் 6 வருடங்கள் வரையான காலம் முதல் நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்தும் வெளிப்படுத்தப்பட்டு காணப்படும் ரூபா 1,000,023 தொகை சந்தை வாடகை வருமானத்தை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போதும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2 வருடங்கள் மற்றும் 7 வருட காலம் முதல் கணக்குகளில் காட்டப்பட்டுள்ள ரூபா 4,406,386 தொகைக்கான செலுத்த வேண்டிய நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்த்திருக்கவில்லை.

**1.3.5 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூலச் சான்றுகள் இன்மை**

---

(அ) கடந்த ஆண்டுகளின் போது வழங்கப்பட்டிருந்த 6 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2017 ஏப்ரல் 30 திகதி வரையும் பதில் அனுப்பியிருக்காததுடன் அக் கணக்குகளுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களில் கணக்கிடக் கூடிய பெறுமதி ரூபா 71,646,655 தொகையாகும்.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 152,193,054 தொகைக்கான 08 சொத்து விடயங்கள், ரூபா 10,785,174 தொகைக்கான 03 பொறுப்புக்கள் மற்றும் ரூபா 1,069,745 தொகைக்கான வருமான விடயமொன்றிற்குரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையினால் அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

**1.3.6 சட்டங்கள்விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள்விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள்விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை | |
| (i) விதி இலக்கங்கள் 59 முதல் 63 | அதிகாரப் பிரதேசத்தில் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு கைத்தொழில்கள் மற்றும் வியாபாரங்கள் தொடர்பான நிரல் ஒன்று தயாரித்திருக்கவில்லை. |
| (ii) விதி இலக்கங்கள் 203 முதல் 214 மற்றும் 218 | சபையின் ஆதனங்கள் தொடர்பாக முழுமையான கணிப்பீடு ஒன்று செய்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக்கோவை | |
| xix ஆம் அத்தியாயத்தின் 5.2.1 ஆம் உப பிரிவுகள் | விவாகமான உத்தியோகத்தர் ஒருவரின் அடிப்படைச் சம்பளத்தில் வீட்டு வாடகை 12.5 சதவீதம் அறவிடப்பட வேண்டிய போதிலும், செயலாளரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் வதியும் பெண் உத்தியோகத்தரிடம் குறைவாக வீட்டு வாடகை அறவிடப்பட்டமையால் சபைக்கு ரூபா 38,180 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. |

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை
-----------------------------------------------------------

| | |
|---|---|
| (i) நி.பி. 396(ஈ) | 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள ஆனால் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை கடந்துள்ள ரூபா 1,049,533 தொகை பெறுமதியான 114 காசோலைகள் தொடர்பாக செயற்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி. 571 மற்றும் 572 | வைப்புச் செய்யப்பட்டு 2 வருடங்கள் முதல் 8 வரையான காலம் கடந்திருந்த ரூபா 414,920 தொகை பெறுமதியான கேள்விப் பிணை வைப்பு தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (iii) நி.பி. 754 | மீளாய்வாண்டிற்கான மின்சார பண்டங்களின் பெறுகைகள் மற்றும் வழங்குதல்கள் தொடர்பாக இருப்பு பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நி.பி. 1645(அ) மற்றும் (ஆ) | மீளாய்வாண்டின் ரூபா 171,256 இற்கான வாகன திருத்த வேலைகள், சேவைகள் மற்றும் உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்தல் என்பன சம்பவக் குறிப்பேடுகளில் பதிவு செய்யப்படாமல் காணப்பட்டதுடன் சபைக்குச் சொந்தமான 17 வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) சுற்றறிக்கைகளும் சுற்று நிருபங்களும்
-----------------------------------------------------------

| | |
|---|---|
| 2015 மே 18 ஆம் திகதி உள்ளூராட்சி ஆணையாளரின் NCP/LG/AC/4/1/2 | தலைவருக்காக ஒதுக்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ வாகனம் 2015 திசெம்பர் மாதம் முதல் ஒரு மாதத்திற்கு 150 லீட்டர்கள் எரிபொருள் வரையறைக்கு உட்பட செயலாளர்களினால் பயன்படுத்தக் கூடியதாக இருந்த போதிலும், அதற்கு இணங்காமல் |

மீளாய்வாண்டின் போது உரிய எரிபொருள் வரையறையை மிகைத்து 2388 லீற்றர்கள் டீசல் பயன்படுத்தப்பட்டு ரூபா 226,860 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் படி, 2016 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்திலும் கூடிய செலவினம் ரூபா 12,233,446 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 14,098,539 தொகையாகும்.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2016 ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடி யானவை | 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
| --- | --- | --- | --- |
| | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரியும் வரியும் | 25,866,000 | 14,876,798 | 7,053,119 |
| வாடகை | 13,938,656 | 3,012,375 | 837,174 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 694,000 | 823,505 | 1,438,570 |
| ஏனையவை | 12,754,400 | 8,827,328 | 6,646,487 |

**2.2.2 வீதவரி**

ஆண்டின் போது சிட்டையிடப்பட்ட வீதவரி மற்றும் வரி வருமானம் ரூபா 16,241,253 தொகை எனினும் அவற்றில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 12,523,317 தொகை

எனப்படும் 77 சதவீதமாக இருந்ததுடன் வருட ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 5,688,663 தொகையில் சேகரிக்கப்பட்டிருந்தது ரூபா 2,353,480 தொகை எனப்படும் 41 சதவீதம் மாத்திரமே. நிலுவையாகக் காணப்பட்ட வீதவரி மற்றும் வரி தொடர்பாக சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் அறவீடு செய்யவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.3 வாடகை**

ஆண்டின் போது சிட்டையிடப்பட்ட வாடகை வருமானமாகிய ரூபா 3,818,999 தொகை அறவீடு செய்யப்பட்டிருந்தது ரூபா 3,759,489 தொகை எனப்படும் 98 சதவீதமாகக் காணப்பட்டதுடன் வருட ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 894,281 தொகையான நிலுவை மீதியில் ரூபா 777,664 தொகை வருட இறுதியிலும் நிலுவையாகக் காணப்பட்டது. எனினும் அப் பணத்தினை அறவீடு செய்வதற்காக வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

வருட ஆரம்பத்தில் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 1,454,855 தொகைக்காக அனுமதிப்பத்திரக் கட்டண வருமானத்தில் ஆண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்தது ரூபா 16,825 தொகை எனப்படும் 1 சதவீதமாகிய மிகவும் குறைந்த பெறுமதியே ஆகும்.

**2.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

(அ) வட மத்திய மாகாண முதலமைச்சு 2007 ஆண்டின் போது பிரதேச சபைக்கு வழங்கியிருந்த ரூபா 541,000 தொகை பெறுமதியான அரிசி மா உற்பத்தி உபகரணத்தொகுதி எதுவித உற்பத்திக்கும் பயப்படுத்தப்படாமல் 10 வருடங்களை விட மிகையான காலம் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) பிரதேச சபையினால் 2014 ஆண்டின் போது ரூபா 939,167 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்ட 6 கடைகளுக்காக அத்திவாரம் போடப்பட்டு கொங்கிரீட் தூண்கள் மாத்திரம் செய்யப்பட்டு 02 வருடங்களை விட மிகையான காலம் கடந்துள்ள காரணத்தினால் தூண்களுக்கு பயன்படுத்தப்பட்ட சுருள் உருக்கு மற்றும் மென்உறுக்கு கம்பி வெயில் மற்றும் மழையினால் தாக்கப்படுவதினால் துருப்பிடிக்கக் கூடிய நிலைக்கு ஆளாகி காணப்பட்டதனால் அத்திவாரச் சுவர் அழிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டதென பௌதீகப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

(அ) 07 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 430,581 தொகை பெறுமதியான ஊழியர் கடன்மீதியொன்று 1 வருடம் முதல் 8 வருடம் வரையான காலம் முதல் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2015 ஆண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்த மின்சார பண்டங்கள் வழங்கள் பதிவேட்டின் படி 2017 பெப்ரவரி 14 திகதி வரை மீதியாக காணப்பட்ட ரூபா 186,300 தொகை பெறுமதியான 414 CFL மின்குமிழ்கள் உட்பட ஏனைய மீதியாக உள்ள மின்சாரப் பொருட்கள் ஏதேனும் பௌதீக ரீதியில் காணப்படாததுடன் இது தொடர்பாக கவனம் செலுத்தி பொறுப்புச்சொல்ல வேண்டியவர்களை இனங்கண்டு அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) குப்பை முகாமைத்துவத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 4,996,731 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் குப்பை வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் பெற வேண்டிய வருமானமொன்றினை இழந்துள்ளது.

(ஈ) தற்போது சபையில் கடமையாற்றும் பெண் உத்தியோகத்தர் ஒருவருக்கு மற்றும் திம்புலாகல வலய கல்வி அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்றுக்சென்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு 40 சவீதத்தை மிகைத்து வங்கி கடன் பெறுவதற்கான சபையினால் போலியான சம்பள விவரம் வழங்கப்பட்டிருந்தது.

(உ) 2014 திசெம்பர் 16 திகதி சபைக்கு கிடைத்திருந்த 360 கல்வணய்ஸ் குழாய்கள் பிரதேச சபை மந்திரிமார்களினால் எடுத்துச் செல்லப்பட்டிருந்த போதிலும் அவற்றை 2017 பெப்ரவரி 14 திகதி வரை சபைக்கு ஒப்படைத்திருக்காமை தொடர்பாக பொறுப்புச்சொல்ல வேண்டிய உத்தியோகத்தர் எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(ஊ) இலக்கம் 3981 முதல் 4180 வரையான மானிப்புத்தகம்(நீர்) 200 தொகையான அடிச்சீட்டு புத்தகங்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.2 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

(அ) குப்பைகளை அகற்றுவதற்காக இலங்கை மகாவலி அபிவிருத்தி அதிகார சபையினால் 2012 ஆண்டின் போது அரலகங்வில தம்பகஹ ஊற்றுப் பகுதியில் வழங்கியிருந்த 05 ஏக்கர் காணி 04 வருடங்களை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும் சட்டரீதியாக உரித்தாக்கியிருக்காததுடன் நாளாந்தம் சேகரிக்கப்படும் 7.5 தொன்னை விட மிகையான குப்பைகள் முறையான நடைமுறையொன்று கடைபிடிக்கப்படாமல் அந்த திறந்த தரையில் குவிக்கப்படுவது காணக்கூடியதாக இருந்தது. இந்த கழிவுப்பொருட்களுக்கு அண்மையில் வனவிலங்குகள் நடமாடுதல் மற்றும் பிரதேசத்தில் மிகவும் கூடிய துர்நாற்றம் வீசுதல் போன்ற பல்வேறு சுற்றாடல்சார் மற்றும் சுகாதார சிக்கல்கள் ஏற்பட்ட காரணத்தினால் இது தொடர்பாக கவனம் செலுத்தி குப்பைகளை மீள்சுழற்சிப்படுத்துவதற்காக முறையான நடைமுறையொன்று துரிதமாக ஆரம்பிப்பதற்கு சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**3.3 பதவியணியினர் நிருவாகம்**

02 இரண்டாம் நிலை பதவிகள், 35 ஆரம்ப நிலை பதவிகள் மற்றும் அமைய அடிப்படையில் சேர்க்கப்பட்ட 16 ஊழியர்கள் உட்பட 53 பதவிகள் மிகையாகக் காணப்பட்டதுடன் அவ் ஊழியர்களின் நியமனக் கடிதங்களின் பிரகாரம் கடமைகள் சாட்டப்படாமல் வேறு கடமைகள் சாட்டப்பட்டிருந்தன.

**3.4 அகக் கணக்காய்வு**

அகக் கணக்காய்வு ஒன்று நிறுவனத்தில் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் விசாரணை உத்தியோகத்தர்களின் அலுவலக பரிசோதனையின் போதும் போதியளவு பகுதிகள் அணவல் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) பதவியணி நிருவாகம்

(ஈ) கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(உ) உள்ளகக் கட்டுப்பாடு

(ஊ) வாகனக் கட்டுப்பாடு